# கிழக்கு மாகாண சிறந்த தமிழ் இலக்கிய நூல் விருது வழங்கல்

மாகாணத்தினுள் வாழும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் வருடாந்தம் நடைபெறும் இலக்கிய விழாக்களின் போது விழா நடைபெறும் ஆண்டுக்கு நேர் முன்னைய ஆண்டில் கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாக அல்லது வசிப்பிடமாக கொண்ட எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்களுக்காக இப் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

**விருது வழங்கலுக்கான விதிமுறைகள்**

தேர்வுக்கு உட்படுத்தப்படும் நூல்கள்:

1. கிழக்கு மாகாணத்தில் வாழும் எழுத்தாளரினால் அல்லது கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட நூலாக இருத்தல் வேண்டும்.
2. முதற் பதிப்பு மாத்திரமே தேர்வுக்கு உட்படுத்தப்படும்.
3. நூல்களின் தலா நான்கு (04) பிரதிகளை தேர்வுக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. ஒரு எழுத்தாளரினால் எழுதப்பட்ட நூலாக இருத்தல் வேண்டும். கூட்டாக எழுதிய நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. ஒருவர் ஒரு துறை சார்பாக ஒரு நூலை மாத்திரமே போட்டிக்காக சமர்ப்பிக்கலாம். எனினும் பரிசு வழங்கப்படும் பல்வேறு துறைகள் சார்பிலும் அவர் தனித் தனியாக போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.
6. நடுவர் குழுவினால் சிறந்த நூல் என விதந்துரைக்கப்படும் நூல்களுக்கு மட்டுமே விருதுகள் வழங்கப்படும்.
7. சிறந்த நூல்கள் வராத போட்டித் துறைகளுக்கு விருதுகள் வழங்க வேண்டிய கட்டாயம் இல்லை.
8. தேர்வுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் வேறு எந்த மாகாண இலக்கிய நூல் தேர்வுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருத்தல் கூடாது.
9. தேர்வு பெறும் நூலின் ஆசிரியர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதை அந்தந்த பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படும்.
10. நூல் தேர்வில் நடுவர்களது தீர்ப்பே இறுதியானதாக கொள்ளப்படும். மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
11. முறையற்ற தகவல்களை வழங்கி விருது பெறுபவர்களின் விருதும் பணப் பரிசும் எந்த நேரத்திலும் இரத்துச் செய்யப்பட்டு மீளப் பெறப்படும்.

திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்,
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்